பொதுக் கணக்குக் குழுவில் ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங்களில்

(1) திரு. பி. எச். பாண்டியன்,

(2) திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ஆகியோரையும் உறுப்பினர்களாக பணியாற்ற வேண்டுமென்று கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் 174-வது விதியின்கீழ் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்களை பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

(10) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு, வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களை திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1978).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தியமைத்தல் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1978.) பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1978—ம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(11) தனித் தீர்மானம்

1978 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டத்தை நிராகரிக்கக் கோருதல்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, " 15—5—78-ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1978) இப் பேரவை நிராகரிக்கின்றது " என்ற தீர்மானத்தை முன் மொழிந்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவசரச் சட்டம் எப்போது பிறப்பிக்கப்பட்டது என்றால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாராவது ஒருவர் வழிமொழிய வேண்டும். அதன் பின்னர் தாங்கள் பேசுங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, " 15—5—1978 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1978) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்ற தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்தின்மீது திரு. சுப்பு அவர்கள் பத்து நிமிடங்களும், திரு. ரமணி அவர்கள் ஐந்து நிமிடங்களும், திரு. மாரிமுத்து அவர்கள் ஐந்து நிமிடங்களும் பேசுவதற்கு அனுமதி கொடுக்கிறேன். அமைச்சரவர்கள் 15 நிமிடங்கள் பேசுவார்கள்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அந்தச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது எப்போது என்ற விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். மின்சார ஊழியர்கள் போராட்டம், போக்குவரத்து ஊழியர்கள் போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம் ஆகிய போராட்டங்கள் ஏற்பட்ட நேரத்திலேதான் இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு உழைக்கின்ற மக்கள் அத்தனைபேரும் தங்களது நியாயமான கோரிக்கைகளை வைத்துப் போராட்டம் நடத்துகின்ற சூழ்நிலையில் இந்த அவசரச் சட்டம் போடப்பட்டது. குறிப்பாக போக்குவரத்துத் தொழிலாளர்கள் தங்களுடைய